நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 187/2017

## P.W. 1 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | பெரியதம்பி |
| கிராமம் | : | மேட்டுபாளையம் |
| வட்டம் | : | மேட்டுபாளையம் |
| மாவட்டம் | : | கோயம்புத்தூர் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 61 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025-ஆம் வருடம், நவம்பர் மாதம், 19-ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.10 PM

1. நான் தற்போது கோவையில் மேட்டுபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 01.04.2017 ம் தேதி சனிக்கிழமை மதியம் 02.00 மணியிலிருந்து 3.00 மணி சுமாருக்கு எனது சொந்த வேலை சம்மந்தமாக

மேட்டுபாளையத்திலிருந்து கண்ணாமூச்சி வழியாக நான் இருச்சக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது திடீரென எனக்கு இடுப்பு வலி ஏற்பட்டது.

2. போரைமேடு என்ற இடத்தில் நிறுத்தி அங்கிருந்த ஊர்க்காரர்களை விசாரித்தபோது அங்கு சின்னசாமி என்பவர் ே ஹாமியோபதி வைத்தியம் பார்த்துக்கொண்டிருப்பதாகவும், அவரிடம் சிகிச்சை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அவரது வீட்டை அடையாளம் காண்பித்தனர்.
3. நான் போகும் போது சின்னசாமியும் அவரது மனைவியும் வீட்டில் இருந்தார்கள். நான் அவர்கள் வீட்டிற்கு சென்று உடல்நிலை சரியில்லை என்று சொன்னதால் எனக்கு எதிரி சின்னசாமி ஊசி போட்டார். பிறகு சின்னசாமி இந்த ஊசி போட்டதால் மயக்கம் வரும் அதனால் ஒரு அரை மணிநேரம் கட்டிலில் படுத்திருந்து ஓய்வு எடுத்துவிட்டு செல்லுங்கள் என்று சொன்னார். நானும் அரைமணிநேரம் கழித்து சென்றுவிட்டேன்.
4. நான் ஊருக்கு சென்றபிறகு என் உடம்பு முழுவதும் அலர்ஜீ போன்று அரிப்பு அரித்துக்கொண்டே இருந்தது. தலையிலும் தொந்தரவாக இருந்தது. அதன்பிறகு கோயம்புத்தூர் வழக்கறிஞரான அரவிந்த் தியாரோ என்பவரிடம் சென்று நடந்ததை சொல்லி மனு போடச்சொன்னேன். வழக்கறிஞர் 06.04.2017 ம் தேதி பதிவு தபால் ஒன்றை என்சார்பில் அனுப்பினார். பதிவு தபாலில் உள்ள 1 முதல் 9 வரையுள்ள அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார்.
5. என்னிடம் காண்பிக்கப்படும் 06.04.2017 ம் தேதியிட்ட பதிவு தபால் இதுதான். அதிலுள்ள கைரேகை என்னுடையதுதான். **(மேற்படி பதிவு தபால் அனுப்பிய அறிவிப்பு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன்பிறகு கொளத்தூர் காவல் நிலையத்தில் இருந்து 10.04.2017 ம் தேதி கொளத்தூர் காவல் நிலையத்திற்கு என்னை வரச்சொன்னார்கள்.
6. ஆய்வாளர் நடந்த விவரங்களை கேட்டார். நான் நடந்ததை சொன்னேன். எதிரியை அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் எதிரியின் வீட்டிற்கு போலீசாரை அழைத்துச்சென்று காண்பித்தேன். அப்போது எதிரி பழனி பாதயாத்திரை சென்றுவிட்டார் என்று அவருடைய மனைவி சொன்னார்.
7. பிறகு மீண்டும் கொளத்தூர் காவல் நிலையத்திற்கு நானும் போலீசாரும்

வந்துவிட்டோம். போலீசார் வழக்கறிஞருக்கு கொடுக்க மனு ரசீதை 10.04.2017 ம் தேதி கொடுத்தார்கள். நான் வழக்கறிஞருக்கு பதிலாக கட்சிக்காரர் என்ற முறையில் மேற்படி மனுரசீதை நான் பெற்றுக்கொண்டேன். மனு ரசீதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். ( **மனு ரசீது அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கறிஞர் அரவிந்த் தியாரோ கடந்த 09.09.2025 ம் தேதி உடல் நிலை சரியில்லாமல் இருந்து கோவை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். அவரது இறப்பு சான்றிதழை இன்று போலீசாரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

8. போலீசார் என்னை விசாரித்து கைரேகை வாங்கினார்கள். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. எதிரியை கைதுசெய்துவிட்டதாக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**உரிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**